16.09.2016

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பொறியாளருக்கு பெருமை

கிருஷ்ணராஜ சாகர் அணையைக் கட்டிய விஷ்வேஷ்வரய்யாவின் பிறந்த தினம் இந்தியாவில் பொறியாளர் தினமாக கொண்டாடப்படுகிறது. இவரைப் போற்றும் வகையில் கர்நாடக அரசு செப்., 15ம் தேதியை மாநில விடுமுறை தினமாக அறிவித்துள்ளது. இவரது சேவையைப் பாராட்டி இவர் மைசூரின் திவானாக நியமனம் செய்யப்பட்டார்.பிரிட்டிஷ் அரசு இவருக்கு சர் பட்டம் வழங்கி கவுரவம் செய்தது. இவரது முன்னோர்கள் ஆந்திராவின் பிரகாசம் மாவட்டத்தில் கில்லூாருக்கு அருகில் உள்ள 'மோட்ச குண்டம்' என்ற ஊரைச் சேர்ந்தவர்கள். எனவே தான் இவரது பெயரோடு 'மோட்ச குண்டம்' என்ற வார்த்தை சேர்ந்தது. இவர் கர்நாடகாவில் முத்தனஹல்லி என்ற ஊரில் பிறந்தவர்.

### விவசாயிகளுக்கு மானியம் இந்தியன் வங்கி தாராளம்



இந்தியன் வங்கியின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது. வங்கி சார்பில், மகளிர் சுய உதவி குழுக்களுக்கும் வங்கி கடன் அளிக்கிறது. தொழில் முனைவோர்களுக்கும் பல்வேறு கடனுதவிகளை அளித்து வருகிறது. இந்தியன்

வங்கி கடனுதவிகள் மூலம் மகளிர் குழுக்களில் இணைந்துள்ள பெண்கள் அனைவருக்கும் சுய தொழில் தொடங்கி வாழ்வில் முன்னேறுகின்றனர். பயிர்க்கடன் திட்டங்கள்: உழவர் கடன் அட்டை திட்டம். உழவர் கூடுதல் கடன் அட்டை திட்டம் (கே.சி.சி. - பிளஸ்), பொன் அறுவடை திட்டம் (தமிழகம் மற்றும் ஆந்திரா), கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு ஆலையின் பரிந்துரைப்படி வழங்கும் பயிர்க்கடன். கரும்பு ஊக்கக்கடன் திட்டம் (சுகர் பிரீமியம்). தங்க நகை ஈட்டின் பேரில் விவசாயக்கடன். இதில் சிறு, குறு மற்றும் இதர தனிநபர் விவசாயிகள். குத்தகை விவசாயிகள். உழவர் கூட்டுக்கடன் குழுக்கள் ஆகியோர் பயன் பெற்று வருகின்றனர்.

திட்டங்களின் சிறப்பம்சம்: பயிர்க்கடன் 3 லட்சம் ரூபாய் வரை ஆண்டுக்கு 7 சதவிகித வட்டியில் (மத்திய அரசின் வட்டி பகிர்வு திட்டங்களின் கீழ்) வழங்கப்படுகிறது. வேளாண் பயிர்க்காப்பீட்டு நிறுவனம் ஒவ்வொரு பருவத்திலும் அறிவிக்கும் பயிர்களுக்கு பயிர்க்காப்பீடு வழங்குகிறது. இந்தியன் வங்கி கிளை அலுவலகங்களை அணுகலாம். வங்கி தொடர்புக்கு கட்டணமில்லா தொலைபேசி எண்கள் 1800 425 1400. **- எம்.குணசேகரன் தொழில், விவசாய ஆலோசகர் சென்னை.**

## க்ரீன் காபி



மலைப்பயிர்களான காபி, தேயிலை சாகுபடிக்கு பூச்சிக் கொல்லி மருந்து கட்டாய தேவையாக உள்ளது. திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் காபி விவசாயம் அமோகமாக நடக்கிறது. பூச்சிகள் தாக்குதலில் இருந்து காபியை காப்பாற்ற பூச்சிக்கொல்லி மருந்துகளை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர்.

காபி பழத்தில் இருந்து காபி கொட்டையை பிரித்து, விழுவிழுப்பான சதைப்பகுதியை 'ரோதை' எனும் இயந்திரத்தின் பாத்திரத்தில் கொட்டி தண்ணீரில் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். பின் காபி தளிர் எனும் காப்பி கொட்டைகளை வெயிலில் நன்கு காய வைப்பர். காய்ந்த காபி கொட்டைகளை இயந்திரத்தில் கொடுத்து தோல் நீக்கி, முழு காப்பி கொட்டையை தரம் பிரித்து காபி போர்டில் விலைக்கு விவசாயிகள் விற்பர். காபி விவசாயத்தில் லாபம் ஈட்ட விவசாயிகள் படும் பாடு சொல்லி மாளாது. காபி விவசாயத்தில் லாபம், நஷ்டம் இரண்டும் உண்டு.

இயற்கை முறையில் காபி சாகுபடி என்பது இயலாத காரியமாக இருந்தது. கொடைக்கானல் கீழ்மலைப்பகுதியை சேர்ந்த பட்டாரி விவசாய தம்பதி செந்தில், மணிமேகலை ஆகியோர் காபி சாகுபடியை ரசாயனம் அல்லாத பஞ்சகாவ்யம், வேப்பம்புண்ணாக்கு போன்றவற்றை பயன்படுத்தி இயற்கை முறையில் விளைவித்து சாதனை படைத்து வருகின்றனர். தங்களின் புதிய கண்டுபிடிப்பாக காபியில் மதிப்பு கூட்டி 'கிரீன் காபி'யை அறிமுகம் செய்துள்ளனர். இதற்காக தோட்டக்கலைத்துறையின் அங்கக சான்றிதழ் பெற்றுள்ளனர்.

விவசாய தம்பதி கூறியதாவது: கிரீன் காபியில் 'கப்பின்' கிடையாது. அதற்கு பதிலாக 'குளோரோஜெனிக் ஆசிட்' நிறைந்திருக்கிறது. இதை பருகும்போது உடல் 'மெட்டா பாலிசத்தை' அதிகரிக்க செய்வதோடு, தேவையற்ற கொழுப்புகளை நீக்கி உடல் எடையை குறைக்கிறது. சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியாகவும் உள்ளது. கிரீன் காபியை மதிப்பு கூட்டி முதல் முறையாக சந்தைப்படுத்தியுள்ளோம். இதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கிறது. எங்களின் கிரீன் காபி என்ற புதிய இயற்கை பானத்தை மத்திய உணவு பதப்படுத்துதல் துறை இணை அமைச்சர் சதானி நிரஞ்சன் ஜோதி அறிமுகம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நன்கு கொதிக்கும் நீரில் கிரீன் காபியை தேவையான அளவு கலந்து, கருப்பட்டி, நாட்டுச்சர்க்கரை, தேன் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை கலந்து வடிகட்டி பருகலாம். பால் கலக்க தேவையில்லை. சூடாக பருக, சுவை இதமாக இருக்கும் என்றனர். தொடர்புக்கு 98422 85553. - **கா.சுப்பிரமணியன் மதுரை.**

## தொட்டுத் தொடரும் பட்டுத்துறை



இந்திய பண்பாடு கலாசார பாரம்பரியத்துடன் பட்டு இரண்டற கலந்தது. பட்டு வளர்ச்சிக்கு மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்கு பல்வேறு மானியங்களை வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு சார்பில் பட்டு வளர்ச்சிக்கு சேலத்தில் இயக்குனர் அலுவலகம், பல்வேறு மாவட்டங்களில் இணை, துணை உதவி இயக்குனர் அலுவலகங்களை அமைத்து பட்டு விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருகிறது. இந்திய அரசின் மத்திய பட்டு வளர்ச்சி வாரியம் சார்பில் இந்தியா முழுவதும் அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது.

பட்டுக்கு தரச்சான்று: தமிழ்நாடு அரசு திட்டங்களுடன் இணைந்து பயிற்சி, கடன், மானியம், மார்க்கெட் உதவி, கருத்தரங்கம் நடத்துதல், புத்தகம், பத்திரிகை வெளியிடுதல் என பல உதவிகளை செய்து வருகிறது. மல்பெரி பயிரிடும் விவசாயிகளுக்கு உதவி, தொழில் நுட்ப உதவி, பட்டுப்புழு வளர்க்க, ஷெட் அமைக்க, நூல் தயாரிக்க, பட்டு நெசவு செய்ய என பட்டு விவசாயிகளுக்கு மத்திய பட்டு வளர்ச்சி வாரியம் உதவுகிறது. பட்டு சேலை, துணிகள், துண்டுகளை விற்க, மானியம் வழங்க, ஏற்றுமதி செய்ய உதவுகிறது. தரமான பட்டுக்கு 'தரச்சான்று' வழங்குகிறது.

கண்காட்சிகள் நடத்தவும், ஏற்றுமதிக்கும் உதவுகிறது. கூடுதல் விவரங்களுக்கு

'மத்திய பட்டு வாரியம், 44, தளிரோடு, ஓசூரு, கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 109' ல் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி 04344- 422 2013.

**சம்பங்கி சாகுபடியில் சாதிக்கும் 'அரசு'**



முயற்சியும், ஆர்வமும் இருந்தால் எப்படிப்பட்ட பிரச்னைகளையும் சமாளித்து சாதிக்க முடியும் என நிரூபித்து காட்டியுள்ளார் மதுரை மாவட்டத்தில் வறண்ட பகுதியான உசிலம்பட்டியை சேர்ந்த விவசாயி அரசு, 54. தனது ஒரு ஏக்கரில் சம்பங்கி சாகுபடி செய்து மாதம் 15 ஆயிரம் ரூபாய்க்கும் குறையாமல் வருவாய் ஈட்டி வருகிறார். முகூர்த்த நாட்கள், விழா காலங்களில் வருவாய் அதிகரிக்கும் என்கிறார். சம்பங்கி பயிருக்கு தேவையான மண் புழு உரம் தயாரிக்க, 25 ஆயிரம் ரூபாயில் உரக்கூடம் அமைக்க தோட்டக்கலைத் துறையினரிடம் மானியம் பெற்றார். அரசு கூறியதாவது: எனக்கு சொந்தமான ஒரு ஏக்கரில், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் பூபதி கொடுத்த ஆலோசனைப்படி சம்பங்கியை, 2015 செப்டம்பரில் பயிரிட்டேன். ஆழ்துளை கிணறு இருந்த போதும், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த திட்டமிட்டு 'பட்டர்பிளை தண்ணீர் தெளிப்பான்' அமைத்தேன். உழவு செய்ய, உரம் போட, களை எடுக்க, பட்டர் பிளை தெளிப்பான் அமைக்க என 1.25 லட்சம் ரூபாய் செலவானது. ஏழாவது மாதத்திலிருந்து சம்பங்கி பூக்க துவங்கியது. அனைத்து செலவுகளும் போக மாதம் 15 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கிறது. பயிருக்கு மண் புழு உரமிடுகிறேன். மாதம் ஒரு முறை பஞ்சகாவ்யம் தெளிக்கிறேன் பஞ்சகாவ்யம் பூவின் பூக்கும் திறனை அதிகரிக்க செய்கிறது. எட்டு கி.மீ., தூரத்தில் உசிலம்பட்டியில் பூ மார்க்கெட் இருக்கிறது. நாள் ஒன்றுக்கு சராசரியாக 25 கிலோ

வரை பூ கிடைக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு பயன் தரும் என எதிர்பார்க்கிறேன். பயிர் முடிவில் சம்பங்கி கிழங்கை தோண்டி எடுத்து விற்கலாம். ஒரு கிலோ 50 ரூபாய் வரை கிடைக்கிறது. ஒரு ஏக்கரில் 2 டன் வரை கிழங்கு கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. சம்பங்கி பயிருக்கு தேவையான தண்ணீர் விட்டால் போதும். மற்றபடி அதிக சிரத்தை எடுக்க தேவையில்லை. இதை திட்டமிட்டு சொட்டு நீர் பாசனம் முறைகளை கையாள வேண்டும். வளர்பிறை முகூர்த்த நாட்களில் சம்பங்கிக்கு அதிக விலை கிடைக்கும். 2014ல் விநாயகர் சதுர்த்தி விழாவின் போது சம்பங்கி கிலோ 400 ரூபாய் வரை விலை போனது. ஆனால் தற்போது பெங்களூருவிலிருந்து பட்டன் ரோஸ் அதிகளவில் வரவழைக்கப் படுகிறது. அதை மாலையாகவும் தயாரிக்கின்றனர். இதனால் சம்பங்கி விற்பனை ஓரளவு குறைந்துள்ளது. இருப்பினும் திட்டமிட்டு செயல்பட்டால் சம்பங்கி சாகுபடியில் லாபம் ஈட்ட முடியும் என்றார்.

**தொடர்புக்கு: 94887 90831. - எம்.ரமேஷ்பாபு, மதுரை.**

## காய்கறி சாகுபடி பயிற்சி

திண்டுக்கல், ஆத்தூரில் தோட்டக்கலை துறை சார்பில் பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி குழு உறுப்பினர்களுக்கு காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

தோட்டக்கலை உதவி இயக்குனர் ஹைடிபாய் தலைமை வகித்தார். காய்கறி உற்பத்தியாளர்களுக்கு காய்கறி சாகுபடியில் அதிக மகசூல் பெற தொழில் நுட்ப உழவர் உற்பத்தி நிறுவனம் அமைத்தல், விளை பொருட்களை நேரடியாக சந்தையில் விற்பனை செய்தல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. அலுவலர்கள் சென்றாயன், முருகேசன், முருகன், அன்பு செழியன் கலந்து கொண்டனர். காய்கறி உற்பத்தியாளர்கள் குழு தலைவர் கண்ணன் நன்றி கூறினார்.-

## கோமாரி நோய் தடுப்பு முகாம்: 230 கால்நடைகளுக்கு தடுப்பூசி

கரூர்: கோமாரி நோய் தடுப்பூசி முகாமில், 230 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் சுற்றுவட்டார பகுதிகளில், தமிழ்நாடு காகித நிறுவனம் மற்றும் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. நிறுவன பொதுமேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் தலைமை வகித்தார்.

கால்நடை துறை மண்டல இணை இயக்குனர் பழனிவேல் பேசியதாவது: கோமாரி நோய், கால்நடைகளை தாக்கி, பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் கொடிய தொற்று நோய். இந்நோய் விரைவில் பரவக்கூடியது. நோயுற்ற கால்நடைகளில் கடும் காய்ச்சல், வாய், நாக்கு, மடி, காம்பு, குளம்புகளுக்கு இடையே கொப்பளங்கள் புண்கள் காணப்படும். நோயுற்ற கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், பால், சாணம், உபயோகப்படுத்திய தண்ணீர், தீவனத் தொட்டிகள், தீவனம், காற்று மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்த வியாதி பரவும். நோய் தாக்குதலால் கறவை கால்நடைகளின் பால் உற்பத்தி பாதிக்கப்படுவதுடன் சினைப்பிடிப்பது தடைபடும். எனவே, கோமாரி நோயை தடுக்க, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், அனைத்து கிராமங்களிலும் இலவசமாக தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். வேலாயுதம்பாளையம் கால்நடை மருத்துவர் கல்பனா தலைமையிலான மருத்துவ குழுவினர், 230 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி வழங்கினர். வரும், 23ம் தேதி குப்பம், தளவாபாளையம், நொய்யல், பெரியகாளிபாளையம், புன்னம் மற்றும் சுற்றியுள்ள, 57 கிராமங்களில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடக்கிறது. உதவி இயக்குனர் (நோய் புலனாய்வு) முருகேசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**எலுமிச்சை விலை உயர்வு**

பெரியகுளம் பெரியகுளம் அருகே சோத்துப்பாறை மற்றும் மலைப்பகுதியான அகமலை, பேச்சியம்மன்சோலை, அலங்காரம், உலக்குருட்டி, சொக்கன் அலை பகுதியில் அதிக அளவில் எலுமிச்சை சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடையாகும் எலுமிச்சை பெரியகுளம் கமிஷன் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. இங்கிருந்து தென்மாவட்டங்களின் பல ஊர்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த மாதம் ஒரு எலுமிச்சை ரூ.1 முதல் 2 வரை விற்பனையானது. வெயிலின் தாக்கம், வரத்து குறைவால் தற்போது பெரிய அளவிலான எலுமிச்சை ரூ.8க்கும், அடுத்த ரகங்கள் ரூ.6, ரூ.5க்கு விற்பனையாகிறது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு

சேலம்: சேலத்தில், இன்று நடக்கவிருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 30ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் விவசாய சங்கங்கள், எதிர் கட்சிகள், வணிகர்கள் என, பல்வேறு அமைப்பினரும், கர்நாடகா அரசை கண்டித்து, இன்று பந்த் நடத்துகின்றனர். அதனால், இன்று நடக்கவிருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஒத்திவைக்கப்படுவதாக, கலெக்டர் சம்பத் அறிவித்துள்ளார். இதுகுறித்து, அவர் கூறுகையில், "செப்டம்பருக்கான, மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், செப்., 16க்கு பதிலாக, செப்., 30ம் தேதி காலை, 11:00 மணிக்கு, கலெக்டர் அலுவலகத்தில் நடக்கும். அதில், விண்ணப்பம் மூலமாகவோ, நேரிலோ, விவசாயிகள் குறைகளை தெரிவிக்கலாம்," என்றார்.

## காய்கறி சாகுபடியாளர்களுக்கு நில பரப்பிற்கு ஏற்ப மானியம்

ராமநாதபுரம், : ராமநாதபுரத்தில் பெருநகர காய்கறி வளர்ச்சி திட்டத்தில் காய்கறிசாகுபடியாளர்களுக்கு நிலப்பரப்பிற்கு ஏற்ப மானியம் வழங்கபடும் என, பயிற்சி முகாமில் தெரிவிக்கப்பட்டது.

ராமநாதபுரம் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, நயினார்கோவில் வட்டார பெருநகர காய்கறி வளர்ச்சி திட்டத்தின் சார்பில் காய்கறி சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி வேளாண் அறிவியல் நிலையத்தில் நடந்தது. தோட்டக்கலை துறை உதவி இயக்குனர்(பொறுப்பு) அழகேசன் தலைமை வகித்தார்.
நயினார்கோவில் வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குனர்(பொறுப்பு) தியாகராஜன் வரவேற்றார். தொழில்நுட்ப சாகுபடி முறை குறித்து கடலோர உவர் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ராஜமாணிக்கம், காய்கறிகளில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தல் குறித்து உதவி பேராசிரியர் ராம்குமார், பதப்படுத்தல் குறித்து உதவி பேராசிரியை ஆரோக்கிய மேரி பயிற்சி அளித்தனர். மாவட்டத்தில் நயினார்கோவில், பரமக்குடி, போகலுார், கமுதி ஆகிய வட்டாரங்களில் உள்ள 123 வருவாய் கிராமங்களில் தேர்வு செய்யப்பட்ட இடங்களில் வெண்டை, கத்தரி, வாழை உள்ளிட்ட காய்கறிகள் சாகுபடி

செய்யப்படுகின்றன. இக்கிராமங்களில் பெருநகர காய்கறி வளர்ச்சி குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களுக்கு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. இலவசமாக விதைகள் கொடுப்பதுடன் செலவு தொகையில் ரூ.40 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீதம், சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம் வழங்கப்படும் என, பயிற்சி முகாமில் விவசாயிகளிடம் தெரிவிக்கப்பட்டது. தோட்டக்கலை உதவி அலுவலர் நாகராஜன் நன்றி கூறினார்.

### அரசு மானியத்தில் நீர் தெளிப்பான்கள்

ராமநாதபுரம்,: அரசு மானியத்தில் விவசாயிகளுக்கு சொட்டு மற்றும் தெளிப்பு நீர் உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

ராமநாதபுரம் மாவட்ட தோட்டக்கலை துறையில் நடப்பு நிதி ஆண்டில் ரூ.96.32 லட்சத்தில் நுண்ணீர் பாசனம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் முதுகுளத்துார் வட்டாரத்தில் 4 விவசாயிகளுக்கு தெளிப்பு நீர் பாசனக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்படுகிறது.

பயன்பெற விரும்பும் விவசாயிகள் ரேஷன் கார்டு நகல், கிராம அடங்கல், கம்ப்யூட்டர் சிட்டா, நில வரைபடம், சிறு, குறு விவசாயிகள் என, தாசில்தாரிடம் பெற்ற சான்று உள்ளிட்ட ஆவணங்களுடன் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர், வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம். விவரங்களுக்கு மாவட்ட வேளாண் இணை இயக்குனரை 94869 44700 என்ற அலைபேசி எண்ணிலும், மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனரை 89038 51830 என்ற அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் தமிழ் வேந்தன் தெரிவித்துள்ளார்.

## ரூ.1.5 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல் என்.சி.எம்.எஸ்.,ல், 150 பருத்தி மூட்டைகள், 1.5 லட்சம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டன. நாமக்கல் மற்றும் சுற்று வட்டார பகுதிகளான பரமத்தி, திருச்செங்கோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பகுதிகளில், 2,500 ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்படும் பருத்தி ரகங்கள், நாமக்கல் என்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வாரம் தோறும் வியாழக்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது. நேற்று நடந்த ஏலத்தில், ஆர்.சி.ஹெச்., குறைந்தபட்சம், 6,906 ரூபாய், அதிகபட்சம், 6,186 ரூபாய்க்கும் விற்பனையானது. மொத்தம், 150 மூட்டைகள், 1.5 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## பயிர்களை வறட்சியில் இருந்து பாதுகாக்க அலுவலர்களுக்கு பயிற்சி

தர்மபுரி: தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில், பயிர்களை வறட்சியில் இருந்து பாதுகாக்க, வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கு பயிற்சி நடந்தது.

வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்து பேசுகையில், "பயிர்களை வறட்சியில் இருந்து காக்க, வறட்சி வேளாண்மை தொழில் நுட்பங்களை சரியான தருணத்தில் பயன்படுத்துவதின் முக்கியத்துவம் குறித்து, வேளாண் விரிவாக்க அலுவலர்கள் விவசாயிகள் மத்தியில் கொண்டு சென்று, மானாவரி பயிர் மகசூலை அதிகரிக்க செய்ய வேண்டும்," என்றார். பயிற்சியில், பி.பி.எப்.எம்., எனப்படும் மெத்தலோ பாக்டீரியாவின் பயன்பாடு, இலைவழி தெளிப்பு குறித்து விளக்கப்பட்டது. மேலும், வறட்சி மேலாண்மையில் பொட்டாசியன் பங்கு குறித்து உதவி பேராசிரியர் சங்கீதா விளக்கம் அளித்தார். தொடர்ந்து, பி.பி.எப். எம். இலைவழி செயல்விளக்கம் வயல் வெளியில் செய்து காண்பிக்கப்பட்டது. வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) வெங்கடேசன், துணை இயக்குனர் சுசீலா உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### முட்டை விலை 375 காசாக உயர்வு




நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 375 காசாக உயர்ந்துள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. இதில் முட்டை விலையில் 14 காசுகள் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து ஒரு முட்டையின் பண்ணைகொள்முதல் விலை 351 காசில் இருந்து 375 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

மற்ற மண்டலங்களில் விலை உயர்ந்து வருகிறது. தேவையும் அதிகரித்துள்ளது. இதனால் நாமக்கல் மண்டலத்திலும், முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளது என பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரே நாளில் 14 காசு உயர்ந்துள்ளதால் பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஒரு கிலோ முட்டைக்கோழி 80 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி 74 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (பைசாவில்) ஐதராபாத் 357, விஜயவாடா 367, மும்பை 394, மைசூர் 370, பெங்களூர் 350, கொல்கத்தா 422 காசுகள்.

## நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் □2.50 லட்சத்திற்கு பருத்தி ஏலம்

நாமக்கல், : நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில், □2.50 லட்சத்திற்கு பருத்தி ஏலம் நடைபெற்றது.

நாமக்கல், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. பல்வேறு ஊர்களை சேர்ந்த விவசாயிகள் மொத்தம் 150 மூட்டை பருத்தியை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். இதில், பங்கேற்பதற்காக கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், ஈரோடு, கோவை, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்தனர். விவசாயிகள் முன்னிலையில் நடந்த ஏலத்தில் ஆர்சிஎச் ரகம் ஒரு குவிண்டால் □6,096 முதல்ரூ □6,189 வரை ஏலம் போனது. ஆக மொத்தம் □2.50 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது.

## ரூ.59 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

மொடக்குறிச்சி, : மொடக்குறிச்சி சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 2 ஆயிரத்து 116 மூட்டைகளில் 1 லட்சத்து 4 ஆயிரத்து 3 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.இதில் முதல் தர கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.60.35க்கும், குறைந்தபட்ச விலை ரூ.58.35 க்கும், இரண்டாம் தர கொப்பரை அதிகபட்ச விலை கிலோ ஒன்றுக்கு ரூ.56.15 க்கும் குறைந்த பட்சவிலை ரூ.44.00க்கும் என மொத்தம் ரூ.57 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

மேலும் 10 ஆயிரத்து 300 கிலோ எடையுள்ள 24 ஆயிரத்து 695 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில் அதிக விலை டன் ஒன்றுக்கு ரூ. 17 ஆயிரத்து 310, குறைந்த விலை டன் ஒன்றுக்கு ரூ.16 ஆயிரத்து 340 என ரூ.1 லட்சத்து 64 ஆயிரத்துக்கு ஏலம் போனது. தேங்காய் ஒன்றுக்கு ரூ.5.26 முதல் ரூ.8.25 வரை விலை போயிருந்தது.

## வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு விளக்க பயிற்சி

பட்டுக்கோட்டை,: பட்டுக்கோட்டை அடுத்த வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் தென்னை செயல் விளக்கம் மற்றும் பயிற்சி நடத்தப்பட்டது. தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவரும், பேராசிரியருமான ராஜேந்திரன் வரவேற்றார். தென்னை பற்றிய சிறப்புக் கருத்துக்காட்சி மற்றும் செயல் விளக்கங்களை விவசாயிகள் அனைவரும் பார்வையிட்டு பயனடைந்தனர். விவசாயிகளுக்கு தென்னை குறித்த முக்கிய செயல் முறைகளான வேர் மூலம் பூச்சி மருந்து மற்றும் தென்னை டானிக் செலுத்துதல், வாய்க்கால் அமைக்கும் கருவி, தென்னை மரம் ஏறும் கருவி, போர்டோ கலவை தயாரிக்கும் முறை ஆகியவை பற்றி செயல்முறை விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது.

பயிற்சியில் தென்னை மகத்துவம் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் குறித்து பட்டுக்கோட்டை வேளாண் அலுவலர் மாலதி விளக்கமளித்தார். ஓய்வுபெற்ற பேராசிரியர் சேகரன், இளநீர்காயை எளிதில் துளையிட்டு இளநீர் குடிக்கக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட கருவியைக் கொண்டு செயல்விளக்கம் செய்து காண்பித்தார். தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் தென்னை விளைச்சலில் இடர்பாடுகளும், நிவர்த்தி முறைகளும் என்கிற தொழில்நுட்ப கையேட்டினை முன்னாள் தலைவர் நடராஜன் வெளியிட, பேராவூரணி அக்ரோ தென்னை உற்பத்தியாளர்கள் கம்பெனியின் இயக்குநர் பெற்றுக்கொண்டார். தென்னையில் உயர் தொழில் நுட்ப சாகுபடி முறைகள் பற்றி பேராசிரியர் மோகன்தாஸ் எடுத்துரைத்தார். பயிற்சியில் டெல்டா மார்ட் இயக்குநர், மேரிக்கோ நிறுவனம் கிருஷ்ணபிரதாப் மற்றும் திரளான தென்னை விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் உதவி பேராசிரியர் (பயிர் நோயியல்) தங்கேஸ்வரி நன்றி கூறினார்.

## அதிக மகசூல் பெற நிலக்கடலைக்கு ஜிப்சம் அவசியம் வேளாண்மை அதிகாரி தகவல்

ராமநாதபுரம், : நிலக்கடலை சாகுபடியில் திரட்சியான பருப்புகளையுடைய நிலைக்கடலைகளை பெற ஜிப்சம் உரம் இடுவது அவசியம் என வேளாண்மை அதிகாரி கண்ணையா தெரிவித்தார்.ராமநாதபுரம் மாவட்டத்தில் கருத்தனேந்தல், செய்யாமங்களம், வழிமறிச்சான் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் மானாவாரி

பயிராக நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நிலக்கடலை விதைத்த 40 முதல் 70 நாட்களுக்குள் உள்ள ஈரத்தை பொறுத்து அடியுரமாக ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இடவேண்டும். பின்னர் செடிக்கு அருகில் 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அனைத்து கொடுக்க வேண்டும்.

23%, சல்பர் 18% உள்ளது. வேரின் வளர்ச்சியை துரிதப்படுத்தவும், திரட்சியான காய்களை உருவாக்கவும், நாய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கவும் சுண்ணாம்புசத்து அவசியம். சுண்ணாம்பு சத்து மண்ணில் எளிதில் நகராது. ஆகவே செடிக்கு அருகில் இடுவது அதிக பலன் தரும். விதைகள் உருவாவதற்கும், எண்ணெய்சத்து அதிகரிப்பதற்கும் சல்பர் சத்து உதவி புரிகிறது.

நிலக்கடையில் பூக்கள் விழுதுகளாக மாறி நிலத்தினுள் சென்று கடலைகளாக முளைக்கின்றன. பூக்கும் பருவம் பயிரிட்ட 26ம் நாளில் தொடங்கிறது. 45ம் நாளில் விழுதுகள் நிலத்தினுள் இறங்க ஆரம்பிக்கின்றன. அந்த சமயங்களில் மண்ணை கிளறிவிட்டு நிலத்திற்கு ஜிப்சம் உரம் இடுவதால் விழுதுகள் எளிதாக மண்ணிற்குள் சென்று காய்கள் பிடிப்பதை அதிகப்படுத்தும். ஜிப்சம் வேரின் வளர்ச்சியை அதிகப்படுத்தி நீரை அதிகம் இழுத்து பயிருக்கு கிடைக்க செய்வதால் எடை அதிகமுள்ள கடலைகளை பெறலாம். ஜிப்சம் உரம் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு 50% மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

## கமுதி பகுதியில் சாம்பார் வெங்காயம் விளைச்சல் அமோகம் மகிழ்ச்சியில் விவசாயிகள்

கமுதி, : கமுதி பகுதியில் தற்போது சாம்பார் வெங்காயம் விளைச்சல் அமோகமாக நடந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கமுதி-அருப்புக்கோட்டை சாலையில் உள்ள காவடிபட்டி, கிழாமரம், சாமசாமிபட்டி, மேலராமநதி, கீழராமநதி, கோரப்பள்ளம், நீராவி, கரிசல்குளம், கூலிபட்டி உள்ளிட்ட கிராமங்களில் அப்பகுதி விவசாயிகள் 50க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் சாம்பார் வெங்காயம் பயிரிட்டுள்ளனர்.

தற்போது அப்பகுதியில் உள்ள வயல்களில் சாம்பார் வெங்காயத்தின் பயிர்கள் நன்கு வளர்ந்து பூத்துள்ளது. இதனால் அமோக விளைச்சல் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர். இதனால் நல்ல விலை கிடைக்கும், கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அப்பகுதி விவசாயிகள்

மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

போதிய அளவு பருவமழை பெய்யாததால் கடும் வறட்சியில் விவசாயம் பொய்த்து போனதால் அப்பகுதி விவசாயிகள் கவலையில் இருந்து வந்தனர். இந்நிலையில் சாம்பார் விளைச்சல் கைகொடுத்ததால் விவசாயிகள் ஓரளவு நிம்மதி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயி மாரியப்பன் கூறுகையில், ‘சாம்பார் வெங்காயத்தின் விலை கடந்த சில மாதங்களுக்கு மேலாக அதிகரித்து உள்ளது, இதன் காரணமாக தங்களது வயல்களில் வெங்காயத்தை பயிரிட்டோம். தற்போது நல்ல விளைச்சல் கண்டுள்ளதால் கூடுதல் லாபம் கிடைக்கும்’ என்றார்.